<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

அ.வ.எண். 87/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ஜெயராமன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | வீரராகவன் |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | பூதேரிபுல்லவாக்கம் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 09ஆம் நாள் புதன்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

எனது சொந்த ஊர் பூதேரி புல்லவாக்கம் ஆகும். சரவணன் எனது ஊர்காரர் என்றால் சரிதான். நான் ஊரில் வட்டிக்கு விடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல, நான் ஆசிரியர் பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். பிரதிவாதி டிராக்டர் வாக்குவதற்காக ரூ1,00,000/- வாங்கினார், வெற்றுபாண்டில் கையெழுத்து வாங்கவில்லை, எழுதிய பாண்டில் தான் கையெழுத்து வாங்கினேன். அப்போது டிராக்டர் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். முதலில் பிரதிவாதி ரூ.30,000/-மும் அதன்பிறகு தொடர்ந்து வட்டி செலுத்திவந்தநிலையில் அதன்பிறகு ஒரு ரூ.50,000/- வாங்கினார் என்றால் சரியல்ல முழுமையாக ரூ.1,00,000/- வாங்கினார். என்னுடைய நிலங்களில் உழுது அதில் நான் ரூ.15,000/- கொடுக்க வேண்டுமென்றால் சரியல்ல எனக்கு நிலமே கிடையாது. கொரோனா காலம் என்பதால் வேலையில்லை என்றும் அதனால் பணத்தை திருப்பி செலுத்த முடியவில்லை என்றும் வாங்கியிருந்த ரூ80,000/- அதில் என்

தோட்டத்தில் வேலை செய்து தான் ஊழவு கூலி போக மீதி பணத்தை கொடுக்க பிரதிவாதி தயாராக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பியதாகவும் அதன்பிறகு பிரதிவாதி என்னை சந்தித்து கொஞ்சம் கொஞ்சமாக பணம் செலுத்துவதாக சொன்னார் என்று சொன்னால் சரியல்ல வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபிறகு என்னை சந்திக்கவில்லை. பிரதிவாதி வாங்கிய ரூ.80,000/- கொடுக்க தயாராக இருந்தும் நான் அவரிடம் வாங்கிய நிரப்பப்படாத பாண்டை வைத்து பொய்யாக தொகைகளை நிரப்பி இந்த வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாண்டில் சாட்சி கையொப்பமிட்ட ஒருவர் ராந்தம் கிராமம், ஒருவர் செய்யாரை சேர்ந்தவர். பாண்டை செய்யாறு கொடநகரை சேர்ந்தவர் தான் எழுதினார். பெருமாள் மற்றும் சுப்ரமணி ஆகியோர் வெவ்வேறு ஊர்களிலும், அவர்களிடம் தனித்தனியாக கையெழுத்துபெறப்பட்டதா என்றால் இல்லை  அவர்கள் என்னை சந்திக்க வந்தார்கள், அவர்களிடம் சாட்சி கையெழுத்து வாங்கப்பட்டது. எதிரி வெற்று பாண்டு கொடுத்ததாகவும் அதில் நானே தொகைகளை நிரப்பி எனக்கு வேண்டப்படட பெருமாள் மற்றும் சுப்ரமணியிடம் கையெழுதது வாங்கினேன் என்றும் உண்மையில் பிரதிவாதி பாண்டை எழுதிக்கொடுத்திருந்தால் ஒரே ஊர்காரர்களிடம் அங்கு வசிப்பவர்களிடம் வாங்கி கொடுத்திருப்பார் என்றும், இருவரும் வெவ்வேறு ஊர்காரர்களிடம் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.